பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்களின்

இணைச்செயல்முறைகள், சென்னை-06

ந.க.எண். 018919/ஜெ2/2024, நாள். 07.10.2024

பொருள்:: பள்ளிக்கல்வி / தொடக்கக் கல்வி - 2024 - 2025 ஆம் கல்வி ஆண்டு - அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பிற்கான முதல் பருவ தொகுத்தறி / காலாண்டுத்தேர்வு மதிப்பெண்களை EMIS தளத்தில் உள்ளிடுதல் - வழிகாட்டி நெறிமுறைகள் - சார்ந்து.

1. 2024 - 2025 ஆம் கல்வி ஆண்டிற்கான முதல் பருவ தொகுத்தறி / காலாண்டுத்தேர்வு மதிப்பெண்களை EMIS தளத்தில் உள்ளிட வேண்டும்.
2. விடைத்தாள்களை திருத்திய பின்னர் தொகுத்தறி / காலாண்டுத்தேர்வு மதிப்பெண்களை (100 மதிப்பெண்கள்) பாட வாரியாக அக்டோபர் 15 ஆம் தேதிக்குள் உள்ளிடுமாறு EMIS தளத்தில் உள்ளிடுமாறு அறிவுறுத்தப்படுகிறது. இதற்கான வழிகாட்டி நெறிமுறைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
3. அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் நடுநிலைப் பள்ளிகளில் உள்ள 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் இது சார்ந்த விவரத்தினை தெரிவிக்குமாறும், ஆசிரியர்கள் தெளிவுற அறிந்திருப்பதையும் உறுதி செய்யவேண்டும்.
4. அனைத்து அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் இது சார்ந்த விவரத்தினை தெரிவிக்குமாறும், ஆசிரியர்கள் தெளிவுற அறிந்திருப்பதையும் உறுதி செய்யவேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ளனவற்றை நடைமுறைப்படுத்தும்படி அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கும், மற்றும் மாவட்டக்கல்வி அலுவலர்களுக்கும் (தொடக்கக் கல்வி) அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு : மதிப்பீடு உள்ளீடு செய்வதற்கான வழிமுறைகள்

**இயக்குநர்**

**தொடக்கக் கல்வி இயக்குநரகம்**

7-10-2024

**இயக்குநர்**

**பள்ளிக்கல்விஇயக்குநரகம்**

7.10.2024

**பெறுநர்**

அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள்

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி)

# இணைப்பு

**முதல் பருவ தொகுத்தறி மதிப்பெண்களை EMIS செயலியில் உள்ளிடுதல் - வழிகாட்டி**

**STEP 1**: EMIS தளத்தில் (EMIS (tnschools.gov.in)) உங்கள் emis id & password ஐ பயன்படுத்தி உள் நுழையவும்.




**STEP 2**: உள் நுழைந்தவுடன் "Activity" ஐகான் ஐ க்ளிக் செய்து "Academic Scores" க்ளிக் செய்து "Mark Entry" ஐ க்ளிக் செய்ய வேண்டும்.

